# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
திங்கட்கிழமை 04.10.2021
supeedsam.com
supeedsam@gmail.com




## மட்டக்களப்பு மண் ராஜபக்ஸக்களின் கூடாரமா

### புணானை மேற்கில் மக்கள் ஆர்ப்பாட்டம்






(க.ருத்திரன்)

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட புணானை மேற்கு அணைக்கட்டு பகுதியில் உள்ள 6 நபர்களுக்குரிய காணியில் கிறவல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டு பாரிய குழியில் தோண்டி கிறவல் அகழப்பட்டு வருவதாக அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் மற்றும் சிறுவர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மண் ராஜபக்ஸக்களின் கூடாரமா என்ற பதாதைகளுடன்

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கை வருகிறார் இந்திய இராணுவ தளபதி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கூட்டுப் பயிற்சியான 'மித்ரா சக்தி'யை அவதானிக்க இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவானே இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

## கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைப்பதற்கும் முயற்சி



(ராஜ்)

ஒருங்கிணைந்த கூட்டங்கள் இடம்பெறாமையானது சில தெளிவற்ற நிலைமைகளையும் குழப்பங்களையும் தோற்றுவித்துள்ளது என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைப்பதற்கும் சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் மக்களின் அபிலாசைகளிற்கு தீர்வை காணவேண்டும்

### இந்திய வெளிவிவகார செயலாளர் தெரிவிப்பு

(ஊர்காவலன்)

ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம்,நீதி,சமாதானம், கௌரவம் ஆகியவற்றிற்கான தமிழ் மக்களின் அபிலாசைகளிற்கு தீர்வை காணவேண்டும் என இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார செயலாளர் ஸ்ரீ ஹர்ச வர்தன் ஸ்ரீங்க்லா தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...



## இலங்கை- இந்திய இராணுவ யுத்த பயிற்சி இன்று

### அம்பாறையில் ஆரம்பம்

இலங்கை மற்றும் இந்திய இராணுவத்தினர் பங்குகொள்ளும் யுத்தப் பயிற்சி இன்று அம்பாறையில் ஆரம்பமாகவுள்ளது.

நட்புறவு சக்தி என்ற இந்த பயிற்சி

02 ஆம் பக்கத்தில்...

## எந்தவொரு சதியாலும் அரசைக் கவிழ்க்க முடியாது!



### பங்காளிகளுக்கு பஸில் பதிலடி

(காந்தன்)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு நிலையான அரசு. இந்த அரசை எந்தவொரு சூழ்ச்சியாலும் கவிழ்க்க முடியாது. அரசுக்குள் எவரும் இருக்கலாம்.எவரும் வெளியேறலாம் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும்,நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

### திஹிலிவெட்டை பகுதியில் பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு திஹிலிவெட்டை வாவிக்கு அப்பால் உள்ள காட்டுப் பிரதேசத்தில் இயங்கிவந்த

02 ஆம் பக்கத்தில்...

## வெள்ளிமலை பிள்ளையார் ஆலய வயல் காணியை மீட்டுத் தாருங்கள்

### ஆலய பரிபாலன சபை கோரிக்கை

(மட்டுநிருபர்)

மட்டக்களப்புபொன்னறுவை எல்லைக் கிராமமான வடமுனை ஊத்துச்சேனை வெள்ளிமலை பிள்ளையார் ஆலயத்துக்கு சொந்தமான வயல்காணியை முஸ்லிம் இனத்தைச்சோந்தவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

எனவே இந்த ஆலயத்துக்கு சொந்தமான 21 ஏக்கர் வயல் காணியை மீட்டுத் தருமாறு ஆலய பரிபாலனசபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.


ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஆலய பரிபாலனசபை தலைவர் சுதாகரன், செயலாளர் சிவம், பிரதி தலைவர், நிசங்க, ஆலயகுரு உதயன்குருக்கள் உட்பட பரிபாலன சபையினர் கலந்துகொண் டு இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

குறித்த ஆலய புனர்நிர்மாண மற்றும்

02 ஆம் பக்கத்தில்...

## கூஜா தூக்கும் செயற்பாடுகளை முழுமையாக கைவிட வேண்டும்

### முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்



(நமது நிருபர்)

காங்கிரஸின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசாங்கத்திற்கு தாரைவார்ப்பதற்கு விரும்பவில்லை என்றும் அந்த நான்கு உறுப்பினர்களும் அரசாங்கத்திற்கு 'கூஜா' தூக்கும் செயற்பாடுகளை முழுமையாக கைவிட வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மெய்நிகர் ஊடாக வழங்கிய செவ்வி ஒன்றின்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## இந்தியா தமிழர் இடையே கலாசார பரிமாற்றத்தின் அடையாளம்

### யாழில் இந்திய வெளிவிவகார செயலாளர்



(யாழ்.கீதன்)

இந்தியா மற்றும் யாழ்ப்பாண தமிழர்களுக்கிடையில் கலாசார பரிமாற்றத்தின் அடையாளமாக யாழ் கலாசார மத்திய நிலையம் விளங்கும் என இந்திய வெளிவிவகார செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த

02 ஆம் பக்கத்தில்...










## இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமலை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு விஜயம்



(திருமலை ரவ்பீக் பாயிஸ், ஹஸ்பர் ஏ ஹலீம்)

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹார்ஸ் வர்தன் சிங்லா திருகோணமலையிலுள்ள பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு நேற்று காலை விஜயமொன்றை மேற்கொண்டார்.

02 ஆம் பக்கத்தில்...

## திஹிலிவெட்டை பகுதியில் பாரிய கசிப்பு

பாரிய கசிப்பு உற்பத்தி நிலையமொன்றை நேற்று (3) அதிகாலை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பொலிஸ் குழுவினர் முற்றுகையிட்டுள்ளனர்.

அங்கிருந்த மூன்றுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் ஓரிலட்சத்து 65 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு, நான்கு கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 4 இலட்சத்து %0 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மற்றும் சில பொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் இங்கு உற்பத்தி செய்யப்படும் கசிப்பினை வேறுபகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் தோணியொன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மற்றும் பொருட்களும் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஏறாவூர்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பீஎஸ்பீ. பண்டார தெரிவித்தார்.



## இந்திய வெளிவிவகார அமைச்சின்

இந்திய அரசுடன் இணைந்து இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்திய செயற்திட்டங்கள் குறித்து பார்வையிடுவதற்காக திருகோணமலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய சாலைக்கு சென்று தாங்கிகளையும் பார்வையிட்டார்.

சீனக்குடா விமான நிலையத்தில் நேற்று காலை 11 மணிக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குள் செல்வதற்காக இரு பக்க வீதிகளும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் சீனக் குடாவில் உள்ள பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தையும், தாங்கிகளையும் பார்வையிட்டார். ஆனாலும் திருகோணமலை மாவட்டத்தில் முக்கிய இடங்களுக்கு நேற்று சனிக்கிழமை சில அமைச்சர்கள் வருகை தந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருந்த போதிலும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளருடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர்கள் சிலர் செல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் எவரும் செல்லவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை- இந்திய இராணுவ யுத்த

15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக 18 இந்திய இந்திய அதிகாரிகள் அடங்கலாக 120 வீரர்கள் நேற்றைய தினம் விமானம் மூலம் மத்தளை விமான நிலைய விமானத்தை வந்தடைந்தனர்.

இந்திய இராணுவத்தின் கேனல் பிரகாஷ் குமார் தலைமையிலான வீரர்கள். நட்பறவு சக்தி கூட்டு பயிற்சி பிரதி பணிப்பாளர் பிரிகேடியர் பீ,என். கோகேல்வத்த தலைமையில் வரவேற்கப்பட்டனர்.

## வெள்ளிமலை பிள்ளையார் ஆலய வயல்

ஆலயத்துக்கான வீதி அபிவிருத்தி மின்சாரம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஆலய பரிபாலனசபையினர் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் ஆலயத்தின் காணி அபகரிப்பு தொடர்பாக ஆர்ப்பாட்டம் இடம் பெறப் போவதாக ஆல யத்துக்கு செல்லும் வீதிகளில் பொலிஸார் பாதுகாப்புகடமையில் ஈடுபட்டு ஆலயத்துக்கு செல்ல வந்த தேரர் உட்பட ஆலய நிர்வாகத்தினரை அனுமதிக்கவில்லை.

இந்த ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் கூறுகையில்

இந்த ஆலயம் நூற்றாண்டுகளுக்கு மேற்பட்டதுடன் பொலனறுவை மாவட்டத்தில் முதல் முதல் பதிவு செய்யப்பட்ட ஆலயமாகும். இருந்தபோதும் இந்த ஆலயத்தில் ஊத்துச்சேனை, சிறிஓடை, கள்ளிச்சி ஓடை, குமாரபுர, வடமுனை ஆகிய 5 கிராமங்களில் தமிழ், சிங்கள மக்கள் வாழ்ந்துவந்தனர். இந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தினால் தமிழ்மக்கள் தமது காணிகள், வீடுகளை விட்டு வெளியேறி வாழைச்சேனைக்கும் சிங்கள மக்கள் வெலிகந்தைக்கும் இடம்பெயர்ந்தனர்.

இதனால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆலயம் மக்கள் சென்று பராமரிக்கமுடியாத நிலையினையடுத்து ஆலய கூரைகள் உடைந்து பாரிய சேதமடைந்தன . இதன் பின்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010ஆம் ஆண்டு மக்கள் மீண்டும் குடியேறிய நிலையில் ஆலயத்துக்கும் செல்லும் வீதி மக்கள் பயணிக்க முடியாதளவு சேதமடைந்துள்ளதுடன் காடுகள் வளர்ந்துள்ளன .

ஆலயத்துக்கு முன்னாள் உள்ள ஆற்றிற்கு மறுபக்கம் 1926 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணி உறுதியுடனான 21 ஏக்கர் வயல்காணி உள்ளது. இந்த காணியை 2010ஆம் ஆண்டு முஸ்லிம் இனத்தச் சேர்ந்த ஒருவர் தனது காணி என காணிபத்திரத்தை கொண்டு அபகரித்து வேளாண்மை செய்துவருகின்றார்.

இந்த ஆலயத்துக்கு சொந்தமான காணியை பெற்றுத்தருமாறு கிரான் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தோம். அதற்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை. அதேவேளை கடந்த மாதம் அந்த வயல்காணியை ஆலய நிர்வாகம் வேளாண்மை செய்வதற்காக உழுது நெல்லை பயிரிட்டு 21 நாட்களின் பின்னர் குறித்த நபர் உழவு இயந்திரம் கொண்டு அந்த வேளாண்மை பயிரை உழுது அழித்துள்ளார்

எனவே ஆலயத்துக்கு சொந்தமான இந்த வயல்காணியை உரிய அதிகாரிகள் பெற்றுத் தரவேண்டும் என்றனர்.




## இந்தியா தமிழர் இடையே கலாசார பரிமாற்றத்தின் அடையாளம்

அவர் இந்திய அரசின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கலாசார மண்டபத்தை பார்வையிட்ட பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ் நகரத்திற்கு மீண்டும் வருகை தந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். 2011 இல் இருந்து 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல முறை இங்கு விஜயம் செய்துள்ளேன். இந்திய நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தை சுற்றிப் பார்ப்பதற்கு வருகை தந்துள்ளேன். இந்தியா மற்றும் தமிழர்களுக்கிடையில் கலாசார பரிமாற்றத்தின் அடையாளமாக இது காணப்படுகின்றது. அந்த கட்டடத்தில் பல் நோக்கு மண்டபம், நூலக வசதி, சங்கீதம், சித்திரம் போன்றவற்றை கற்பதற்கான வகுப்பறை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த கலாசார மண்டபம் யாழ் தமிழ் மக்கள் தமது கலாசாரத்துடன் இணைந்து கொள்வதற்கு பாரிய ஊடகமாக இருக்கப் போகின்றது. கலாசார மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு கட்டடத்தின் பராமரிப்பு செலவினையும் இந்தியாவே பொறுப்பேற்க உள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கலாசார மத்திய நிலையத்தினை அங்குரார்ப்பணம் செய்வதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## கூஜா தூக்கும் செயற்பாடுகளை முழுமையாக கைவிட வேண்டும்

கிழக்கு மாகாணம் உள்ளிட்ட அனைத்து முஸ்லிம்களும் இந்த ஆட்சியாளர்கள் மீது மிகுந்த வெறுப்படைந்துள்ளார்கள் எனவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தன் பின்னர் அது தொடர்பில் பல்வேறு பேச்சுக்களை கட்சிக்குள் நடத்தியிருந்தோம்.

கட்சியின் தலைமையினதும், உயர்பீடத்தினதும் மற்றும் போராளிகளினதும் தீர்மானத்திற்கு மாறாக செயற்படக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறியிருந்தோம். அதற்கு அந்த உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்திருநதனர்.

நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களின் போது கட்சிக்குள் பிளவுகள் என்ற அபிப்பிராயம் ஆதரவாளர்களுக்கும், மக்களுக்கும் சென்று குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் வாக்கெடுப்புக்களின் போது வாக்களிப்பதற்கு இணக்கமில்லாது விட்டால் ஆகக்குறைந்தது அதிலிருந்து விலகி கொள்ளுமாறே அவர்களை வலியுறுத்தியிருந்தோம். அதற்கும் சம்மதம் வெளியிட்டனர். ஆனாலும் புதிய நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் நிதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போது அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்கள்.

இது தொடர்பில் அவர்கள் பதிலளிக்கையில், நிதி அமைச்சரினால் ஒதுக்கீடு செய்யப்படும் அபிவிருத்தி நிதிகள் தமக்கு கிடைக்காது போய்விடும் என்ற அச்சத்தில்தான் ஆதரவாக வாக்களித்தோம் என தெரிவிக்கின்றனர்.

இந்த உறுப்பினர்கள் முதலில் அபிவிருத்தி என்ற மாயையில் இருந்து வெளிவர வேண்டும். கிழக்கு மாகாணம் உள்ளிட்ட அனைத்து முஸ்லிம்களும் இந்த ஆட்சியாளர்கள் மீது மிகுந்த வெறுப்படைந்துள்ளார்கள்.

அவ்விதமாக இருக்கையில் ஆட்சியாளர்களுக்கு 'கூஜா' தூக்குவதை எம்மவர்கள் முதலில் நிறுத்த வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் அவர்கள் அதற்குரிய விலையை நிச்சயம் கொடுக்க வேண்டி வரும்.

இந்த உறுப்பினர்களை அரசாங்கத்திற்கு தாரை வார்த்துவிடக்கூடாது என்பதற்காக நான் ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது கட்சியிலிருந்து அகற்றுதல் போன்ற கடுமையான தீர்மானங்களை இதுவரையில் எடுக்காது இருக்கின்றேன்.

ஆகவே இவர்கள் தற்போதுள்ள யதார்த்தத்தினை புரிந்து கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான கட்சி என்பதை உணர்ந்து கொண்டு, அமைச்சுப் பதவிகளுக்கு சோரம் போகாது தற்போதுள்ள இரண்டும் கட்ட நிலையை கைவிட்டு முடிவொன்றை அவர்கள் எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எந்தவொரு சதியாலும் அரசைக் கவிழ்க்க முடியாது!

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்படுவதற்கு 'மொட்டு ' கூட்டணி அரசிலுள்ள பங்காளிக் கட்சியினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

அரசுக்கு எதிராகப் பகிரங்கமாகவும்,மறைமுகமாகவும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே அமைச்சர் பஸில் ராஜபக்ச ஊடகங்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, எமது அரசில் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமிருக்கின்றது. எவரும் அரசை வாழ்த்தலாம். விமர்சிக்கலாம். ஆனால், அரசை வீழ்த்தலாம் என்று உள்ளேயும்,வெளியேயும் யாரும் சூழ்ச்சி வகுத்தால் அது ஒருபோதும் வெற்றியளிக்காது.

அரசுக்குள் எவரும் இருக்கலாம். எவரும் வெளியேறலாம். எவரும் புதிதாக இணையலாம். எமது கதவு எப்போதும் திறந்திருக்கும். ஆனால், அரசுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுவோருக்கு உரிய நேரத்தில் தக்க பதிலடி கொடுப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு மண் ராஜபக்ஸக்களின் கூடாரமா

சிறுவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.அரச அதிகாரிகளே கணிய வளத்தை சுரண்டுவதற்கு துணை வோவது ஏன்? ராஜபக்சக்களின் பெயர்களால் மண் சுரண்டல்,எமது வளத்தை சூரையாடாதே.பிரதேச செயலாளரே விவசாய நிலங்களில் கிறவல் ,மண் அகழ்வினை தடுக்கவும்.

குறித்த காணிக்கு உரிமை கோரி ஆறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.சுமார் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் அதிகளவான பகுதியில் கிரவல் தோண்டப்பட்டு பெரிய அளவிலான மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது குறித்த காணியில் பயன்தரும் மாம்பழம்இமாதுளை மரம்இ மரவள்ளி போன்ற பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளது என சுமார் 30 பேர் கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த காணியில் பயிர் செய்கை பண்ணுவதற்காக முன்பு கடமையாற்றிய பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்ததுடன் தற்போது அரச காணியில் எவ்வாறு பயிர் செய்ய முடியும் என பிரதேச செயலாளர் கேட்பதாக மக்கள் கவலை தெரிவித்தனர்.இதேவேளை இக்காணிக்கான உரிமம் கோரி 201% ஆம் ஆண்டு காலப்பகுதியில் விண்ணப்பம் செய்துள்ளனர்.

சந்திவெளியில் உள்ள ஒரு தனி நபருக்கு கிரவல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன்இ கிறவல் அகழ்விற்கு எதிராக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக பிரதேச செயலாளரை வினவியபோதுஇகுறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைப்பதற்கும் முயற்சி

மற்றும் ஏனைய பொறுப்புக்களை வகிக்கும் அங்கத்தவர்கள் பொதுவாக வடக்கு, கிழக்கு மாகாண மாவட்டங்களில் வசிக்கிறார்கள்.

கொரோனா வைரஸின் தாக்கம் தனியாகவும் குழுக்களாகவும் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு தடையாக அமைந்துள்ளது. இதன் விளைவாக சில விடயங்கள் தொடர்பில் தெளிவற்ற நிலைமை உருவாகியுள்ளது .

தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றினை அரசியல் யாப்பினூடாக பெற்றுக்கொள்வதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் மிக பிரதானமான குறிக்கோளாகும்.

இந்த நாட்டிலே தமது பூர்வீகத்தினை கொண்டுள்ள மக்களின் இறையாண்மையானது முழு நாட்டிலும் அவர்களுக்கான ஆட்சி அதிகாரம், அடிப்படை உரிமைகள், மற்றும் வாக்குரிமை என்பவற்றினை உள்ளடக்கும், அவர்களின் வரலாற்று ரீதியான பூர்விகம், மற்றும் இலங்கை அரசாங்கமும் தலைவர்களும் உள்நாட்டிலும் சர்வதேசத்திற்கும் கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையிலும் இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திக்கொண்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகள், மற்றும் பிரமாணங்களின் அடிப்படையிலும் அமையப்பெற்றதாகும். இந்த அடிப்படை விடயம் குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு மிக தெளிவாகவும் உறுதியாகவும் தனது நிலைப்பாட்டினை தெரிவித்துள்ளது.

ஏனைய சில விடயங்கள் தொடர்பில், ஒருங்கிணைத்த கூட்டங்கள் இடம்பெறாமையானது சில தெளிவற்ற நிலைமைகளையும் குழப்பங்களையும் தோற்றுவித்துள்ளது.

அதேவேளை, தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைப்பதற்கும் சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

ஒற்றுமையை உறுதி செய்யும் முகமாக இந்த விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெறும். முழுமையான அனைத்தும் உள்ளடங்கிய ஒரு அரசியல் யாப்பினை இந்த நாடு உருவாக்க முனைவதாக கூறப்படுகின்றது. இந்த முக்கிய தருணத்தில் ஒற்றுமையை பேணுவது அடிப்படையானதாகும். மக்கள் மத்தியில் ஒரு தெளிவு இருக்கவேண்டும், மாறாக அவர்களை குழப்பக்கூடாது.

ஒன்றுபட்ட பிளவுபடாத நாட்டிற்குள், சமத்துவம் நீதி மற்றும் சுயகௌரவம் என்பவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வினை எட்டும் எமது குறிக்கோளில் உறுதியாக பயணிப்பதற்கு தெளிவின்மைகளையும் குழப்பங்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன் என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## தமிழ் மக்களின் அபிலாசைகளிற்கு தீர்வை காணவேண்டும்

இந்தியா, இலங்கை உட்பட அனைத்து அயல் நாடுகளுடனும் அமைதியான உறவுகளை பேண விரும்புகின்றது.இது கடல்சார் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கு முக்கியமானது.

இருதரப்பின் மத்தியிலான இந்த பல்வகைப்பட்ட ஈடுபாடுகள் ஒருநாட்டின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றின் மீதான பரஸ்பர மதிப்பின் அடிப்படையிலானவை.

வரலாற்றின் அடிப்படையில் ஆழமான நாகரீக மற்றும் கலாசார உறவுகள் அடிப்படையில் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளதால் இரு நாடுகளிற்கும் பரஸ்பர வளம் மற்றும் பாதுகாப்பு குறித்த நலன் உள்ளது.

எங்களின் பகிரப்பட்ட வரலாற்றின் போது இலங்கை விடுத்த பாதுகாப்பு உதவிக்கான வேண்டுகோள்களிற்கு இந்தியா சாதகமான பதிலை அளித்துள்ளது.

இலங்கையின் தலைவர்களாக அக்காலப்பகுதியில் பதவி வகித்தவர்களின் விருப்பங்களினை முழுமையாக மதிக்கும் நடவடிக்கைகளின் மூலம் அவற்றை நிறைவேற்றியது.

13 வது திருத்தத்தின் நன்மைகள் குறித்த இந்தியாவின் கருத்து என்பது மேலே குறிப்பிட்ட அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதன் காரணமாக ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், நீதி,சமாதானம்,கௌரவம் ஆகியவற்றிற்கான தமிழ் மக்களின் அபிலாசைகளிற்கு தீர்வை காணுமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளோம். 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் நல்லிணக்க நடைமுறைகளை முன்னோக்கி நகர்த்துவதன் மூலமும் இதனை செய்யவேண்டும்.

இதுவே எங்கள் கருத்து.இது பன்முக தன்மை கொண்ட சமூகம் கொண்ட நாடு என்ற இலங்கையின் தன்மையை மேலும் வலுப்படுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்முனை விடயத்தில் நியாயத்தை விட தமிழ் கூட்டமைப்பின் உறவே ஹக்கீமுக்கு அவசியம்

## சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்க பேரவை

(நூருல் ஹுதா உமர்)

தமிழ் தரப்பு அரசியல்வாதிகள் அரசாங்கத்தோடு பயணிக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களை சாடுவதன் உண்மையான நோக்கம் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதை தடுப்பது தான். தமிழ் அரசியல்வாதிகளுக்கு வடகிழக்கு இணைப்பு எவ்வளவு முக்கியமோ அதேபோன்ற முக்கியமான விடயமாகத்தான் கல்முனை உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி அதன் எல்லைகளை பலப்படுத்துவதையும் குறிக்கோளாக கொண்டுள்ளார்கள். அதற்கு தடையாக ஹரீஸ் எம்.பி இருக்கின்றார் என்ற காரணத்திற்காகவே எப்படியாவது அரசாங்கத்தைவிட்டு இவரை வெளியேற்றிவிட வேண்டும் என்று கடும் பிரயத்தனம் செய்கின்றார்கள் என்பதே உண்மையாகும். இதற்கு மறைமுகமான ஆதரவை ஹக்கீமும் வழங்கி வருகின்றார் என கல்முனை சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்க பேரவையின் தலைவர் எம்.எச்.எம். இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.



கல்முனை உப பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் சூடுபிடுத்துள்ள தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் மு.கா தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோரின் அறிவிப்புக்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலையே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தனது அறிக்கையில் மேலும்,

கல்முனை துண்டாடப்பட்டால் அதற்கு காரணம் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தான் என்று அவர்மேல் பழியைபோட்டு கல்முனை அரசியலிலிருந்து ஹரீசை ஒட்டுமொத்தமாக ஓரம்கட்டிவிடலாம் என்பதுதான் மு.காதலைவரின் திட்டமாகுமென்றே என்னத்தோன்றுகிறது. எது எப்படியிருந்தாலும் கல்முனை பிரச்சினையை பிச்சைக்காரனின் புண்னாக வைத்துக் கொண்டு காலாகாலமும் அரசியல் செய்யலாம் என்று நினைத்திருந்த ஹரீஸ் அவர்களுக்கு ஆட்சி மாற்றமானது பெரும் தலையிடியாகவே மாறியிருந்தது.

அதன் காரணமாகவே ஆளும் அரசாங்கத்தோடு சேர்ந்து பயணிக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளினால் கல்முனை துண்டாடப்படலாம் என்ற ஐயத்தின் காரணமாகவே அரசாங்கத்தோடு சேர்ந்து பயணிக்க பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் விரும்பியிருந்தார் என்பதே உண்மையாகும். ஹரீஸ் எம்பி அரசாங்கத்தோடு சேர்ந்து பயணிக்காது விட்டிருந்தால் கல்முனை என்ற நகரம் முஸ்லிம்களின் கையைவிட்டு எப்பவோ சென்றிருக்கும். இந்தவிடயத்தில் சுமேந்திரன், சாணக்கியன், கருணா, வியாழேந்திரன் போன்ற எம்பிமார்கள் கட்சி பேதமற்று ஒன்றான சிந்தனையுடன் பயணிக்கின்றார்கள் என்பது வெள்ளிடை மழையாகும்.

அதேநேரம் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்களின் பிரச்சினைகளை கண்டுகொள்ளாத தலைவர் ஹக்கீமும் ஹரீஸ் அவர்கள் அரசாங்கத்தைவிட்டு வெளியேறவேண்டும் என்றே விரும்புகின்றார். அவருக்கு தேவை கல்முனை பிரச்சினையல்ல தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறவு தான் அவருக்கு தேவையாக இருக்கின்றது. இந்த விடயங்களை கல்முனை மக்களோ அல்லது கல்முனையை சேர்ந்த கட்சி போராளிகளோ அல்லது கல்முனை மீது பாசம்கொண்ட இயக்கங்களோ கண்டுகொண்டதாக தெரியவில்லை என்றே கூறவேண்டும். இந்த விடயங்களின் உண்மைத்தன்மையை வெளிப்படையாக சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் திண்டாடுகின்றார் என்பதே நூறுவீத உண்மையாகும் என்று தெரிவித்துள்ளார்.

## சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசளிப்பு





(இஃஜாஸ் ஏ பரீட்)

கிண்ணியா பிரதேச செயலக பரிவில உலக சிறுவர் தினக் கொண்டாட்டம் 2021ம் ஆண்டிற்கான சிறுவர் சித்திரப் போட்டி 'சொல்ல முடியாததை வரைந்திடுங்கள்' எனும் தலைப்பில் சித்திரப் போட்டிக்கான பரிசளிப்பு விழா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் (01) நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு உத்திமோகத்தரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்விற்கு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமை வகித்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் தாருல் ஈமான் பெண்கள் அஹதிய்யா மாணவிகள் 08 மாணவிகள் தோற்றி 08 மாணவிகளும் போட்டியில் வெற்றி பெற்று சான்றிதழ்களை பெற்றனர்

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் கணக்காளர் மற்றும் பெற்றார்கள் அனைவரும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பாரிய வாய் முகத்தாடை சத்திரசிகிச்சை





வி.சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வாய் முகத்தாடை சத்திரசிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நேற்று ஒரு பாரிய சத்திரசிகிச்சை முதற்தடவையாக நடைபெற்றுள்ளது.

அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற வாய் முகத்தாடை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் வி.ஜ.ஜெயசிங்க (OMF Consultant) தலைமையில் Decompression of Infra orbital nerve and Orbital floor repair என்ற சத்திர சிகிச்சை, மயக்க மருந்து நிபுணர் வைத்தியர் எம்.என்.எம்.எம்.சகீர் உதவியுடன் இந்த சத்திசிகிச்சை நடைபெற்றது.

இந்நிலையில் குறித்த வைத்திய நிபுணர்களுக்கு வைத்திய சிகிச்சையினை பெற்றுக்கொண்டவர் உள்ளிட்டவர்கள் நன்றி கூறுவதுடன் இப்பகுதி வாழ் வைத்திய நிபுணர்களின் சேவையை முடிந்தளவு பெற்று பயன்பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

## நாவிதன்வெளி அன்னமலையில் ஒரு மாணவிக்கு 9 ஏ



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறைவலயத்திற்குட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை தேசிய பாடசாலையில் இம்முறை வெளியான க.பொ.த. சா.தர முடிவுகளின்படி திருநாவுக்கரசு வினூதா என்ற மாணவி 9ஏ சித்திபெற்றுள்ளார் என அதிபர் சீ.பாலசிங்கன் தெரிவித்தார்.

பின்தங்கிய பிரதேசத்திலுள்ள பாடசாலையாயிருந்தும் இங்கு எஸ்.பவித்ரன் ,ரி.அபினேஸ் ,எஸ்.லுக்சன் ஆகியோர் 6ஏ சித்திகளுடன் அடுத்தபடியாக உள்ளனர்.

இங்கு கடந்தாண்டைவிட இவ்வாண்டு அனைத்து பாடங்களிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் ,சமயம் ,புவியியல், தகவல் தொழினுட்பம் ,சித்திரம் ,சுகாதாரக்கல்வி ,மனைப்பொருளியல் ஆகிய 08பாடங்களில் 100வீத சித்தி கிடைக்கப்பெற்றுள்ளது.

9பாடங்களிலும் சித்தியின்மை கிடைக்கப்பெறவில்லை என்றும் 90வீதமானவர்கள் உயாதரத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு;ள்ளனரென்றும் தெரிவித்தார்.

## சுவதாரணி பூஸ்டர் மருந்துப் போதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு



(எம்.ஐ.எம்.றியாஸ்)

கொரோனா தொற்று நோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டில் ஏற்பட்டு இருக்கும் அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு கொவிட்19 வைரசுக்கெதிரான நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த சுவதாரணி பூஸ்டர் மருந்துப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன் வெளி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு கொவிட்19 வைரசுக்கெதிரான நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த சுவதாரணி பூஸ்டர் மருந்துப் பொதிகளை நிந்தவூர்ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.சீ.டில்சாத் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனிடம் வழங்கி வைத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் திட்டத்திற்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் உட்பட மூவின உத்தியோகத்தர்களுக்கும் கொவிட்19 வைரசுக்கெதிரான நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த 200 சுவதாரணி பூஸ்டர் மருந்துப் பொதிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும், நிந்தவூர் ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும், ஏற்பாட்டாளருமான டொக்டர் எம்.ஏ.நபீல், நாவிதன்வெளி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், நாவிதன் வெளி பிரதேச சமூகநல உத்தியோகத்தர் டொக்டர் ஆர்.எப்.றிஸ்பியா, நாவிதன் வெளி பிரதேச செயலகக் கணக்காளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் கலந்து கொண்டனர்.

கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும், நிந்தவூர் ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டொக்டர் எம்.ஏ.நபீல் வழிநடத்தலின் மூலம் அம்பாறை மாவட்டம் பூராகவும் ஒலி பெருக்கி மூலமாக இக்கொடிய நோயான கொவிட்19 இல் இருந்து மக்கள் எவ்வாறு பாதுகாப்பு பெற வேண்டும், இதற்கு உட்கொள்ளும் உணவு வகைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பிலும், சுதேச மருத்துவத்துறை மூலமாக பாதுகாப்பு பெறுவது எவ்வாறு அவதானத்துக்குரிய பிரதேசங்களுக்கு சென்று வந்தால் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும், இதன் அறிகுறிகள் தென்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு மூலமாக தெரியப்படுத்தி துண்டுப்பிரசுரங்கள் வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ரஹ்மத் பவுண்டேன் ஏற்பாட்டில் இருதயநாதர் ஆலயத்திற்கு பொதுக்கிணறு





( அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்திற்கு மிக நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த பொதுக்கிணறு ஒன்று கல்முனை ரஹ்மத் சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரில் பிரபலமாக இயங்கி வருகின்ற திரு இருதயநாதர் ஆலயத்தில் சமய ஆராதனைகளுக்கு வருகின்ற பக்தர்களுக்கும் ஞாயிறு அறநெறி வகுப்புகளில் பங்குபற்றுகின்ற மாணவர்களுக்கும் ஆலய வளாகத்தில் குடிநீர் வசதி இல்லாதிருந்தமை நீண்ட கால குறைபாடாக காணப்பட்டது. இப்பிரச்சினையை கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஆர்.செலஸ்டினா, மாநகர பிரதி முதல்வரும் மேற்படி அமைப்பின் தலைவருமான ரஹ்மத் மன்சூரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார்.

இதையடுத்து, அவர் மேற்கொண்ட அவசரநடவடிக்கையின் பயனாக குறித்த ஆலய வளாகத்தில் பொதுக்கிணறு ஒன்று துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு, நேற்று முன்தினம் சனிக்கிழமை (02) மாலை அவரது பங்கேற்புடன் கையளிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர் ஆர்.செலஸ்டினா மற்றும் ஆலய தலைமை நிர்வாகி உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது உரையாற்றிய பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், இவ்வாறான பயன்மிக்கதும் நிலைபேறானதுமான நல்லிணக்க செயற்பாட்டை தமது அமைப்பு முன்னெடுப்பதற்கு உதவிய வை.டபிள்யு. எம்.ஏ. (YWMA) நிறுவனத்துக்கு தனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டார்.

## மல்வத்தை விபுலாநந்தாவில் இருவருக்கு 9ஏ





(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்திற்குட்பட்ட மல்வத்தை விபுலாநந்தா தேசிய பாடசாலையில் இம்முறை வெளியான க.பொ.த. சா. தரப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரண்டு மாணவர்கள் கலபாடங்களிலும் 9ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளரென அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் தெரிவித்தார்.

மாணவிகளான செல்வராசா யதுஷிகா ,மாதவன் பௌர்ணிகா ஆகியோரே 9ஏ சித்தி பெற்றவர்களாவர்.

இதைவிட தோற்றிய 44மாணவர்களுள் 95வீத மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனரென்றும் தெரிவித்தார்.


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Teleton : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# குடும்பப் பெண் மரணம் சந்தேகத்தின் பெயரில் கணவன் பொலிசாரால் கைது

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மவாட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிளூர் கிராமத்தைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவர் வெள்ளிக்கிழமை(01) இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 31 வயதுடைய இராசரெத்தினம் இராசேந்தினி என அடையாளம் காணப்பட்டுள்ளார். இக்குறித்த மரணம் தொடர்பில் மரணமடைந்த பெண்ணின் கணவர் க.கனகராசா என்பவர் சந்தேகத்தின் பொலிசாரால் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது

சம்பவ தினமான வெள்ளிக்கிழமை(01) மாலை குறித்த குடும்பத்தில் தகராறு ஏற்பட்டுள்ளது. பின்னர் கணவர் அயலவர்களை அழைத்து மனைவி விழுந்துகிடக்கின்றாள் என தெரிவித்துள்ளார் அயலவர்கள் ஓடிவந்து வீழ்ந்து கிடந்த பெண்ணை களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளன. இந்நிலையில் அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள பெண் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். சடலம் தற்போது களுவாஞ்சிகுடி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இராசேந்தினிக்கும் கனகராசாவுக்கும் கடந்த 8 வருடங்களுக்கு முன்னர் திருமணம் நடைந்ததாகவும், திருமணம் முடித்துவிட்டு கணவர் மத்திய கிழக்கு நாடொன்றில் 5 வருடங்கள் தொழில் செய்துவிட்டு மீண்டும் வீடு வந்து பின்னர் மீண்டும் மத்திய கிழக்கு நாட்டுக்குச் சென்று இரண்டரை வருடங்கள் தொழில் செய்துவிட்டு கடந்த 14.09.2021 அன்றயத்தினம்தான் வீட்டுக்கு வந்தாகவும், இவர்களுக்கு குழந்தைகள் இல்லை எனவும், அவர் வீடு வந்த தினத்திலிருந்து மதுபானம் அருந்திவிட்டு மனைவியுடன் தொடர்ந்து சண்டைபிடித்து வந்ததாகவும், இராசேந்தினியை அவரது கணவர்தான் அடித்துக் கொன்றுள்ளார் என அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண்ணின் தாய் கடந்த 9 வருடங்களுக்கு முன்னர் இழந்துள்ளார் எனினும் தந்தை அவருடனேயே வசித்து வருகின்றார். தனது மகளுடன் மருமகன் அடிக்கடி சண்டை பிடித்து வந்ததாகவும். அதனை தான் விலக்கச் செல்லும்போதெல்லாம் தன்னை மருமகன் துரத்திவிடுவதாகவும், மருமகன்தான் தனது மகளை கொண்றுவிட்டதாக உயிரிழந்த பெண்ணின் தந்தை இராசரெத்தினம் தெரிவிக்கின்றார்.

இந்நிலையில் தனது தங்கையான இராசேந்தினியை தான் மத்திய கிழக்கு நாட்டிலிருந்து வந்ததும் அடித்துக் கொலை செய்யப்போவதாக தனக்கு குரல் பதிவொன்றை தங்கையின் கணவர் தனக்கு கைத் தொலைபேசிக்கு ஏற்கனவே அனுப்பிவைத்திருந்தாகவும், தங்கையை அவரது கணவர்தான் கொலை செய்துள்ளார் என பொலிஸில் முறைப்பாடு தெரிவித்துள்ளதாக உயிரிழந்த பெண்ணின் சகோதரன் தெரிவிக்கின்றார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த களுவாஞ்சிகுடி பொலிசாரும், பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரும், நிலமையை ஆராய்ந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில் சனிக்கிழமை காலை (02) களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி வி.தியாகேஸ்வரன், சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டு சடலத்தை பிரேத சரிசோதனைக்குட்படுத்தும்பிடி உத்தர விட்டுள்ளார்.

# வெறுமனே சான்றிதழும், பணமும் எங்கள் உறவுகளுக்கு நிகராகிவிடுமா?- அமலநாயகி

(துதிமோகன்)

வெறுமனே சான்றிதழும், பணமும் எங்கள் உறவுகளுக்கு நிகராகிவிடுமா? எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பிலான நீதி விசாரணைக்கு யார் பொறுப்பு? தங்கள் பொறுப்புகளில் இருந்து விலகுவதற்காக காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை காணாமல் போனவர்கள் என்று சொல்வதும், அவர்களுக்கு மரணச் சான்றிதழ், நட்டஈடு வழங்குதல் என்று சொல்வதும் ரணமான எம்மை மீண்டும் மீண்டும் ரணத்திற்குள்ளாக்கும் செயாலாகும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தலைவி அ.அமலநாயகி தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பிலான ஜனாதிபதியின் கருத்து தொடர்பில் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் போனவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்குவதாகவும், நட்டஈடு வழங்குவதாகவும் அண்மையில் ஜனாதிபதியால் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளிடம் தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

முதலில் எங்கள் உறவுகள் காணாமல் போனவர்கள் அல்ல. காணாமல் ஆக்கப்பட்டவர்கள். இறுதி யுத்தத்தின் போது எங்களால் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு தற்போது எங்குள்ளார்கள் என்று தெரியாமல் இருப்பவர்கள். வீடுகள் தேடி வந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இவ்வாறு பல வடிவங்களில் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களே ஒழிய காணாமல் போனவர்கள் அல்ல.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யுத்தம் நிறைவுற்றதன் பின்னரும் பலர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். பலர் வீடுகளுக்கு வந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள், மேலும் பலர் தொழில் நிமித்தம் செல்லுகையில் கடத்தப்பட்டவர்கள் என பல வடிவங்களில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வறான ரீதியில் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத் தான் நாங்கள் தேடிக் கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கான நீதியைக் கோரிக் கொண்டிருக்கின்றோம். காணாமல் போனவர்களை நாங்கள் தேடவில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதி கூறியது போல் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ், நட்டஈடு வழங்குவதாக இருந்தால் அவர்களுக்கு என்ன நடந்தது? எவ்வாறு நடந்தது? யார் என்ன செய்தார்கள்? அவ்வாறு எமது உறவுகளுக்கு ஏதேனும் செய்தவர்களுக்கு உரிய தண்டனை என்ன? இவற்றுக்கான பொறுப்பு யாருக்கு உண்டு? போன்ற எங்கள் கேள்விகளுக்குரிய பதில் என்ன?

வெறுமனே சான்றிதழும், பணமும் எங்கள் உறவுகளுக்கு நிகராகிவிடுமா? எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பிலான நீதி விசாரணைக்கு யார் பொறுப்பு? தங்கள் பொறுப்புகளில் இருந்து விலகுவதற்காக காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை காணாமல் போனவர்கள் என்று சொல்வதும், அவர்களுக்கு மரணச் சான்றிதழ், நட்டஈடு வழங்குதல் என்று சொல்வதும் ரணமான எம்மை மீண்டும் மீண்டும் ரணத்திற்குள்ளாக்கும் செயாலாகும்.

1990களில் இருந்து யுத்தம் முடிவுற்று அதன் பிறகும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களோ, அவர்களுக்கு என்ன ஆனது என்கின்ற விடயமோ




இல்லை. அவர்கள் தொடர்பில் விசாரணைகள் கூட இதுவரை இல்லை. இவ்வாறான நிலைமையிலேயே எமது உறவுகளை நாங்கள் தேடிக் கொண்டிருக்கின்றோம். உறவுகளைத் தேடிய உறவுகளில் பலரை இன்று இழந்து தவிக்கின்றோம். தேடலிலேயே அவர்களின் உயிரையும் விட்டிருக்கின்றார்கள்.

தங்கள் இறுதி மூச்சுக்குள் தங்கள் உறவுகளை எப்படியாவது பார்த்து விடலாம், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையாவது அறிந்துவிடலாம் என்று எத்தனையோ தாய்மார், மனைவிமார், உறவுகள் இன்னும்ம் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு இருக்கு எம்மவர்களின் வலி வேதனைகள் பலருக்கு மிக எளிதாகப் போய் விட்டது.

இத்தனை வருட கால தேடலுக்கும், வலிக்கும் வெறுமனே பணம் ஈடாகிவிடாது. எம்மவர்களுக்கான உரிய நீதி வேண்டும். அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி முன்வர வேண்டும். யார் தவறு செய்துள்ளார் என்பது கண்டறியப்பட்டு உரியவருக்கு நீதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட தரப்பினரின் நியாயங்களும் பார்க்கப்பட வேண்டும். இப்போதும் சர்வதேசத்தினால் தான் எமக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்பதில் நாம் மிக உறுதியாக இருக்கின்றோம். அனைத்து விடயங்களுக்குமான சாட்சியங்கள் இருக்கும் போது ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச நாடுகளும் எமது பிரச்சனைகளின் பாராதூரத் தன்மையை விளங்கிக் கொள்ளாமல் இருப்பது வேதனை தருவதாக அமைகின்றது.

# பட்டதாரி பயிலுனர் ஒரு வருட பூர்த்தி நிரந்தர நியமனத்தினை வழங்குங்கள்




(ந.குகதர்சன்)

ஐம்பத்தி மூவாயிரம் பட்டதாரி பயிலுனர்களுக்கு உடனடியாக 2021.09.03 ஆம் திகதியிடப்பட்டு பட்டதாரி பயிலுனர் ஒரு வருட பூர்த்தி என்று நிரந்தர நியமனத்தினை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று ஒன்றிணைந்த பயிலுனர் ஒன்றியம் மற்றும் ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் என்பவற்றின் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயற்பாட்டாளர் எல்.எம்.அஷ்ரப் தெரிவித்தார்.

ஒன்றிணைந்த பயிலுனர் ஒன்றியம் மற்றும் ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் என்பவற்றின் மட்டக்களப்பு மாவட்ட கிளையினரின் ஊடக சந்திப்பு வாழைச்சேனையில் இன்று சனிக்கிழமை இடம்பெற்ற போதே மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மூன்றாம் திகதி ஐம்பதாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தில் நாற்பத்தி மூவாயிரம் பேருக்கு பட்டதாரி பயிலுனர்களாக நியமனம் வழங்கப்பட்டது. நியமனம் வழங்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. அத்தோடு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நியமனம் வழங்கப்பட்டது. அந்த வகையில் மொத்தமாக ஐம்பத்தி மூவாயிரம் பட்டதாரி பயிலுனர்கள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பட்டதாரி பயிலுனர்களாக நியமனம் வழங்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் பட்டதாரிகள் சங்கத்தினால் அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் வழங்கப்பட்ட நிலையில் ஜனாதிபதியினால் இரண்டு மூன்று மாதங்களில் நிரந்தர நியமனம் வழங்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்டது. இதற்காக மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டது.

ஆனால் எங்களது நிரந்தர நியமனம் இழுபறியாகவே செல்கின்றது. எங்களுக்கு வழங்கப்படும் இருபதாயிரம் கொடுப்பனவில் அத்தியாவசிய பொருட்கள் விலையேற்றம் காரணமாக பொருளாதார ரீதியில் நெருக்கடியினை சந்தித்து வருகின்றோம். எங்களது ஜீவனோபாயத்தினை கொண்டு செல்ல முடியாது கஷ்டமான நிலைமையே காணப்படுகின்றது.

எனவே எங்களது கோரிக்கைகளாக 2021.09.03ம் திகதியிடப்பட்டு பட்டதாரி பயிலுனர் ஒரு வருட பூர்த்தி என்று ஐம்பத்தி மூவாயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமத்தினை வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். அத்தோடு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்கள் வாரத்தில் ஏழு நாட்களும் அழைக்கப்படுகின்றனர். சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நிரந்தர நியமனத்தில் வேலை செய்பவர்களுக்கு இடர் கொடுப்பனவு ஏழாயிரத்து ஐநூறு ரூபாய் வழங்கப்படுகின்றது. ஆனால் நிரந்தர நியமனம் பெற்றவர்கள் போன்று வேலை செய்யும் பட்டதாரி பயிலுனர்களுக்கு வழங்கப்படவில்லை.

அத்தோடு சமுர்த்தி திணைக்களத்தில் வேலை ஐந்து நாட்களும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் வேலை செய்கின்றனர். அவர்களுக்கும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவில்லை. பாடசாலைகளில் ஆசிரியர் பயிலுனர்களாக இணைக்கப்பட்டவர்களை பிரதேச செயலகம் மற்றும் வேறு திணைக்களங்களுக்கும் அழைக்கப்படுகின்றார்கள். இதனால் இணையவளி மூலம் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கை பாதிக்கப்படுகின்றது. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று எங்களது கோரிக்கைகளை முன்வைக்கின்றோம் என்றார்.

ஒன்றிணைந்த பயிலுனர் ஒன்றியம் மற்றும் ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் என்பவற்றின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளர் எம்.ஏ.எம்.இஸ்ஸத், உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இவர்கள் நினைக்கின்ற, எமது மக்களுக்கான அரசியலைச் செய்ய முடியாது

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் -ஸ்ரீநேசன்



(துதிமோகன்)

அரசியற் கைதிகளை அச்சுறுத்திய அமைச்சரின் வருகை தொடர்பான விடயத்திற்கே தலைமையிடம் தங்கள் கருத்தைச் சொல்லவில்லை என்றால். இவர்கள் தமிழ் மக்கள் தொடர்பில் எதனைப் பேசிப் பெற்றுத் தரப் போகின்றார்கள். அவர்கள் நினைக்கின்ற அரசியலைத் தான் இவர்கள் செய்ய முடியுமே ஒழிய இவர்கள் நினைக்கின்ற, எமது மக்களுக்கான அரசியலைச் செய்ய முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

சமகால நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிகக்கையில்,

லொஹான் ரத்வத்த அவர்கள் அண்மையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மதுபோதையில் சென்றார் என்றும் தமிழ்க்கைதிகளை மண்டியிடச் செய்தார் என்றும், பாதணியை நக்கும்படி சொன்னார் என்றும் சொல்லப்பட்டது. அவ்வாறான ஒருவர் மட்டக்களப்பிற்கு வந்திருக்கின்றார். அவர் வரவேற்கப்பட்டாரா? இல்லையா? என்பது வேறு விடயம். ஆனால், அவர் வருகை தந்து கலந்து கொண்ட கூட்டத்தில் அவருடன் இணைந்து யார் யார் கலந்து கொண்டிருந்தார்கள் என்பதையே பார்க்க வேண்டும்.

இவர்கள் உண்மையில் ஒழுங்காகத் தமிழ் மக்களுக்காக அரசியல் செய்பவர்களாக இருந்திருந்தால் எமது மக்களின் தற்போதைய நிலை அறிந்து அவரை வரவேண்டாம், தமிழ் மக்கள் கடும் எதிர்ப்போடு இருக்கின்றார்கள் என்று அவரின் வருகையைத் தடுத்திருக்க வேண்டும். அவ்வாறானதொரு முடிவைக் கட்சித்தலைமை எடுத்திருந்தால் அதனை மறுத்திருக்க வேண்டும்.

அதை விடுத்து, அரசாங்கக் கட்சி அனுப்பியது, தலைமை அனுப்பியது என்றால் குறைந்த பட்சம் அவ்வாறானவர் வருகை தந்த கூட்டத்தில் கலந்து கொள்ளாமலாவது இருந்திருக்க வேண்டும். இதில் எதுவுமே செய்யவில்லை. இது ஒரு சாதாரண விடயம். இந்த விடயத்திற்கே தலைமையிடம் தங்கள் கருத்தைச் சொல்லவில்லை என்றால். இவர்கள் தமிழ் மக்கள் தொடர்பில் எதனைப் பேசிப் பெற்றுத் தரப் போகின்றார்கள்.

# நீர்ப்பாசன திணைக்களத்திற்கு உரித்தான வீதியை புனரமைக்க நானாட்டான் பிரதேச சபைக்கு அனுமதி

(வாஸ் கூஞ்ஞ)

முருங்கன்பிட்டி பகுதி மக்கள் பல ஆண்டு காலமாக பாவனையில் ஈடுபடுத்தி வந்த முருங்கன்பிட்டி, சிறுகண்டல் இணைப்பு வீதியாக உள்ள முருங்கன் குளக்கட்டு வீதியை புனரமைப்பு செய்வதற்கு மன்னார் நானாட்டான் பிரதேச சபைக்கு மன்னார் நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளரினால் உத்தியோகபூர்வ ஆவணம் கையளிக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட முருங்கன் பிட்டி சிறுக்கண்டல் இணைப்பு வீதியாக உள்ள முருங்கன் குளக்கட்டு வீதியை பல ஆண்டு காலமாக அத்தியாவசிய தேவைகளுக்காக இப் பகுதி மக்கள் பிரதான வீதியாக பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் இவ் வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்டதால் மக்கள் இவ் குளக்கட்டு வீதியில் தங்கள் பயணங்களை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வந்தனர்.

இவ் வீதியை புனரமைத்து தரும்படி இவ் வாழ் மக்கள் பல தரப்பினரிடமும் நீண்ட நாட்களாக கோரிக்கைகள் விடுத்து வந்தபோடதும் இது மத்திய நீர்ப்பாசன திணைக்களத்துக்கு சொந்தமாக இருந்த படியினால் இவ் வீதியைப் பிரதேச சபையினால் புனரமைப்பு செய்ய முடியாமல் இருந்து வந்ததும்



சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இருந்தபோதும் இது தொடர்பாக பல கலந்துரையாடலுக்கு பின்னர் குறித்த வீதியை நானாட்டான் பிரதேச சபை புனரமைப்பு செய்வதற்கு மன்னார் நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளரினால் உத்தியோகபூர்வமாக ஆவணம் நானாட்டான் தவிசாளர் தி.பரஞ்சோதி அவர்களிடம் வியாழக் கிழமை (30) கையளிக்கப்பட்ட நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர் முருங்கன், நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர், திணைக்கள உத்தியோகத்தர், நானாட்டான் பிரதேச சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் , கிராம மட்ட அமைப்புக்களின் பிரதி நிதிகள் , ஒப்பந்த காரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் வேலைத்திட்டத்திற்கான நிதியானது பிரமாண நன்கொடை அடிப்படையில் 2021ம் ஆண்டுக்கான நிதி மூலம் 10.2 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவற்றிற்கான நிதியினை முன்னாள் வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் ஏற்பாடு செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது .

# 12-19 வயதுக்குட்பட்டோருக்கான பைசர் கொவிட் 19 தடுப்பூசிகள் கல்முனையில்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் நாள் பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட 12-19 வயதுக்குட்பட்டோருக்கான பைசர் (கனூடித்னுணூ) கொவிட் 19 தடுப்பூசிகள் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, நிந்தவூர் ஆதார வைத்தியசாலை, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை, கல்முனை ஆதார வைத்தியசாலை போன்ற இடங்களில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தாமதமின்றி தடுப்பூசி'யினை பெற தகுதியுடையோர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, நிந்தவூர் ஆதார வைத்தியசாலை, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை, கல்முனை ஆதார வைத்தியசாலை போன்ற இடங்களில் முற்பதிவுகளை செய்து கொள்ளுமாறு தடுப்பூசியினை பெற தகுதியுடையோரை கேட்டுக் கொண்டுள்ளார்.



# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!



UNSW Global

## Are you after O/Levels?

Start your Journey to a World TOP 50 University in Australia from Sri Lanka

Apply now

## UNSW FOUNDATION STUDIES

Contact us to start your journey

Lavanya:
077 489 8773
lavanya.k@aibt.education

AIBT CAMPUS

சாதாரண தரத்தில் (O/L ) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமான The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) தனது Foundation studies கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது . இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.

**அக்டோபர் 5ஆம் திகதி**
பாடகக் கற்கை ஆரம்பிக்கப்படவுள்ளது

# "GRAB YOUR OPPORTUNITY"

## Are you exploring opportunities for world class education with an Australian University?

The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .

AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.

For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் Ms.Lavanya – 077 4898 773




# இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம்கள் மத்தியில் ஹீரோவாக்கும் கொந்தராத்துக்கு துணை போகிறார்

(எஸ்.அஷ்ரப்கான்)



கல்முனை உப செயலகத்தை தரம் உயர்த்த முடியாமல் தடுப்பது முஸ்லிம் காங்கிரஸ்தான் என ராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கூறுவதன் மூலம் அவர் முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம்கள் மத்தியில் ஹீரோவாக்கும் கொந்தராத்துக்கு தன்னையறியாமல் துணை போகிறார் என ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி ராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுக்கு அனுப்பியுள்ள செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் ராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஊடகங்களுக்கு பேசும் போது கல்முனை உப செயலகம் சம்பந்தமாக எவ்வளவோ கூத்து காட்டினோம். இதனை ஒரே இரவில் தரமுயர்த்த அரசாங்கம் தயார். ஆனாலும் அதனை தடுப்பது முஸ்லிம் காங்கிரசே என கூறியுள்ளார். இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்துள்ளமை சரியானது என கூற வருகிறார்.

எம்மை பொறுத்த வரை கல்முனையின் இந்த பிரச்சினையை பிச்சைக்காரனின் புண் போல் வைத்துக் கொண்டு முஸ்லிம் காங்கிரசும் தமிழ் அரசியல்வாதிகளும் அரசியல் செய்கிறார்கள். இவ்விரு தரப்பாரும் இணக்கத்துக்கு வந்து எப்போதோ இப்பிரச்சினையை தீர்த்திருக்கலாம். ஆனால் தமிழ் பேசும் மக்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தி தேர்தல் காலத்தில் தமது அரசியலை முன்னெடுக்கவே இதனை தீர்க்கும் முயற்சிக்கு முன் வராமல் இரு தரப்பும் உள்ளது.

இது விடயத்தில் முஸ்லிம் காங்கிரசும் தமிழ் அரசியல்வாதிகளும் ரகசியமாக பேசி முஸ்லிம்களை முஸ்லிம் காங்கிரசும் தமிழ் மக்களை தமிழ் அரசியல்வாதிகளும் உசுப்பேற்றி உசார் மடையர்களாக்குவதாகவே சந்தேகிக்கிறோம்.

இப்படி பேசும் படி மு. காங்கிரஸ் வியாழேந்திரனை ஆர்வமூட்டியதா என்றும் தெரியவில்லை.

உண்மையில் எமது கட்சியும் ராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் போன்ற அரசுக்கு ஆதரவானோரும் முயன்றால் இப்பிரச்சினையை தீர்க்க முடியும்.

கல்முனையை இனரீதியாக பிரிக்காமல்இ கல்முனையில் ஒரேயொரு தமிழ் மொழி செயலகம் இருக்கும் நிலையில் உப செயலகத்தை ரத்து செய்து, வெஸ்லி பாடசாலை தொடக்கம் பாண்டிருப்பு சேனைக்குடியிருப்பை இணைத்து தனியான பாண்டிருப்பு செயலகம் அமைய ராஜாங்க அமைச்சர் உடன்படுவாராயின் நிச்சயம் இதை கல்முனை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் விரும்புவர் என்பதால் இதை உடனடியாக அரசிடம் கொண்டு சென்று தீர்க்க முடியும்.

இப்படியான ஒரு பிரேரணையை எமது கட்சி பெசில் ராஜபக்ஷவிடம் முன் வைத்து ஒப்பந்தம் செய்துள்ளது.

அப்படி இல்லாவிட்டால் 2014ம் ஆண்டு கல்முனையை நான்காக பிரித்து அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை மீண்டும் வெளியிடச்செய்ய வியாழேந்திரன் முயற்சிக்க வேண்டும்.

இவற்றை செய்ய ராஜாங்க அமைச்சர் முன்வராவிட்டால் தேர்தல் வரும் போது இப் பிரச்சினை முஸ்லிம் காங்கிரசுக்கும் கருணா போன்ற இனவாத அரசியல்வாதிகளுக்குமே சாதகமாக அமையும்.

ஆகவே கல்முனை பிரச்சினையை வைத்து தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் பிழைப்பு நடத்தாமல் நாம் சொல்லும் தீர்வுத்திட்டத்தை ஏற்று பிரச்சினையை தீர்த்து தமிழ்இ முஸ்லிம் ஒற்றுமையை உருவாக்க ஒத்துழைக்க வேண்டும்.

# ஆயித்தியமலையில் விவசாயிகளுக்கு விதைகள் வழங்கிவைப்பு



எஸ்.எஸ்.அமிர்தகழியான்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வலயம் மத்தி விவசாயப் பிரிவின், ஆயித்தியமலை கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவில் காலநிலைக்கு சீரமைவான நீர்பாசன திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதைகள் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (01) ஆயித்தியமலை கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட ஐம்பது விவசாயிகளுக்கு நிலக்கடலை, பயறு, உழுந்து, கௌப்பி போன்ற விதைகள் வழங்கி வைக்கப்பட்டது.

கரவெட்டி விவசாய போதனாசிரியர் கே.லிங்கேஸ்வரன் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ. பேரின்பராஜா, வலயம் மத்தி உதவி விவசாயப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி மற்றும் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு இவ் உதவியினை வழங்கி வைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 28 இலட்சம் ரூபா பெறுமதியான விதைகள் முதற்கட்டமாக தற்போது வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ. பேரின்பராஜா தெரிவித்தார்.

# தீயிட்டு தற்கொலை செய்ய முயற்சித்த தாயை காப்பாற்ற சென்ற மகனும் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதி

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக மனைவி தீயிட்டு தற்கொலை செய்ய முயற்சித்த நிலையில் மகன் காப்பாற்ற சென்ற போது தீப்பற்றிய நிலையில் தாயும், மகனும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு தீயிட்டு தற்கொலை செய்ய முயற்சித்தவர் திருகோணமலை-கண்டி பிரதான வீதியில் வசித்து வரும் திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பெண் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான டபிள்யூ.ஏ.தமயந்தி வீரதுங்க (48வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது மூன்று பிள்ளைகளின் தாயாரான இவர் தனது மகளுடைய மோட்டார் சைக்கிளை விற்பனை செய்து விட்டு வீட்டுக்கு வந்ததாகவும் இதனையடுத்து இவர் மோட்டார் சைக்கிளை கேட்ட போது இருவருக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டதாகவும் இதனையடுத்து கணவர் வீட்டை விட்டு செல்வதாக கூறிவிட்டு வெளியேறியதை அடுத்து மனைவி தனக்கு தானே தீயிட்டு கொண்டதாகவும் இதனை அடுத்து இவரது மகனான 17 வயதுடைய டபிள்யூ.எம். உதித்த குமார என்பவர் தாயாரை காப்பாற்றச் சென்ற போது அவருக்கும் தீப் பற்றியதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த இருவரும் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் சிவில் பாதுகாப்பு படையில் கடமையாற்றும் பெண்ணின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனாலும் இது தொடர்பிலான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வதேச சிறுவர் தின நிகழ்வு-2021 பலாக் கன்றுகள் நடும் நிகழ்வு



(ந.குகதர்சன்)

அனைத்திற்கும் முன்னுரிமை குழந்தைகள் எனும் தொனிப் பொருளில் இவ்வருடத்திற்கான சிறுவர் தின நிகழ்வுகள் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகப் பிரிவில் நடாத்தப்பட்டது.

சிறுவர் தினத்தினை சிறப்பிக்கும் முகமாக தேசிய ரீதியில் 100,000 பயன் தரு பலாமரக் கன்றுகள் நடும் செயற்றிட்டத்திற்கமைவாக வாகரை பிரதேச செயலக பிரிவில் 300 பலா கன்றுகள் நடும் வேலைத்திட்டம் பிரதேச செயலக ரீதியாக 16 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சிறுவர் கழக உறுப்பினர்களால் நடப்பட்டது.

இதன் பிரதான நிகழ்வு சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ் ஒழுங்கமைப்பில் பலாக் கன்றுகள் நடும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆறுமுகம் சுதாகரன், கணக்காளர் ஜெ .ஜோர்ஜ் ஆனந்தராஜ் , சமூர்த்தி முகாமையாளராக திருமதி கலைவாணி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சிறுவர் கழக பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கொரோனா சூழ்நிலையிலும் க.பொ.த.சாதாரண தரத்தில் மன்னார் மாணவர்கள் முன்னிலையானது பாராட்டுக்குரியது

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல்

(வாஸ் கூஞ்ஞ)



கொரோனா தொற்று நோய் தாண்டவமாடியபோதும் தகுந்த முறையில் கற்பித்தல் அற்ற நிலையில் மாணவர்கள் இருந்தபோதும் மன்னார் மாவட்ட கல்வி திணைக்களம் முன்னெடுத்த நடவடிக்கையின் பலாபலனாக மன்னார் மாவட்டமானது வடக்கு மாகாணத்தில் முதல் இடத்திலும் தேசிய ரீதியாக 11 வது இடத்திலும் இடம்பிடித்தமை பாராட்ட வேண்டியதொன்றாகும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு பெருமிதம் கொண்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன் வெளியாகிய க.பொ.த.சாதாரன தர பெறுபேறுகள் அடிப்படையில் மன்னார் மாவட்டமானது வடக்கு மாகாணத்தில் முதல் இடத்திலும் தேசிய ரீதியாக 11 வது இடத்திலும் உள்ளது இது தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் கருத்து தெரிவிக்கையில்

மன்னார் மாவட்டத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா சூழ்நிலை காரணமாக உரிய கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் நடைபெறாத நிலையிலும் கல்வி திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இணையம் மூலமாகவும் செயலட்டை மூலமாகவும் தொடர்ச்சியாக மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றது

அதன் மூலமாக இவ்வாறு கொரோனா இக்கட்டான சூழ்நிலைகளையும் மாணவர்கள் தங்களுடைய முயற்சியை கைவிடாது கல்வியை கற்றதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டம் முதலாவது இடத்திலும் தேசிய மட்டத்தில் பதினோராவது இடத்தையும் பெற்று இருப்பது என்பது மிகவும் பாராட்டிற்குரியது

இதேபோல் தற்போது பல்வேறு துறைகள் கல்வியில் அறிமுகப்படுத்தி இருப்பதால் தங்களுடைய தகுதிக்கு ஏற்ற வகையில் பல்வேறு துறைகளையும் தெரிவுசய்து பெரியவர்கள் கல்வியாளர்களின் ஆலோசனைகளை பெற்று தொடர்ச்சியாக சகல துறைகளிலும் கவனத்தைச் செலுத்தி க.பொ.த. உயர்தரத்திலும் இவ்வாறான சாதனைகளை நிலை நாட்ட வேண்டும் எனவும்

மேலும் எங்களுடைய எமது இளைய சமூகம் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து உருவாக வேண்டும் என்று ஆசி கூறுவதுடன் மாணவ மாணவியரின் கற்றல் செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருந்த மன்னார் மற்றும் மடு இரண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரியர் ஆலோசனை சபை அதிபர்கள் மற்றும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு உதவி வழங்கிய அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# சுவிஸ் உதயம் அமைப்பின் ஏற்பாட்டில் கண்பார்வை இழந்தவரின் வாழ்வாதரத்திற்காக கடைத் தொகுதி



(எஸ்.சபேசன்)

சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாணக் கிளையின் ஏற்பாட்டில் பட்டாசு தவறுதலாக வெடித்ததில் கண்பார்வையினை இழந்த நபர் ஒருவரது வாழ்வாதாரத்திற்காக அழகுசாதனப் பொருட்களை விற்பனை செய்வதற்கான கடைத்தொகுதினை போரதீவுப் பிரதேசத்தில் திறந்து வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை 2 ஆம் திகதி சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாணக்கிளையின் தலைவர் ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.விமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

போரதீவு பிரதேசத்தில் வசிக்கும் உதேஸ்குமார் அவர்கள் சுவிஸ் உதயம் அமைப்பிடம் வேண்டிக் கொண்டதற்கு இணங்க இவரது வாழ்வாதரத்திற்காக ஒருஇலட்சம் பெறுமதியான அழகுசாதனப் பொருட்கள் அவருங்கு வழங்கி வைக்கப்பட்டன.

இவ் உதவிக்கான நிதியினை யாழ்பாணத்தினைச் சேர்ந்தவரும் சுவிஸ் நாட்டில் வாழும் சமூகசேவகர் நாகராசா விஜயகுமார் குடும்பத்தினர் வழங்கி வைத்தனர்.

இதற்கான ஒழுங்குகளை சுவிஸ் நாட்டில் வாழும் சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் தலைவர் டி.எல்.சுதர்சன்இ செயலாளர் அம்பலவாணர் ராஜன் இபொருளாளர் க.துரைநாயகம் இஉதவிச் செயலாளர் வி.பேரின்பராசா மற்றும் அங்கத்தவர்கள் அனைவரினது முயற்சியினால் இவ் உதவி வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கிழக்குமாகாணக் கிளையின் தலைவர் ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.விமலநாதன் பொருளாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியன் அமைப்பின் அங்கத்தவர்களான ஆசிரியர். சா.நடனசபேசன், ஆசிரியர் இ.ஜீவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் உதவிகளை வழங்கிய சமூகசேவகர் நாகராசா விஜயகுமார் குடும்பத்தினருக்கும், சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் நிருவாகத்தினர் மறும் சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்குமாகாணக் கிளை நிருவாகத்தினருக்கும் உதஸ்குமார் நன்றியினைத் தெரிவித்துள்ளார்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich
info@stravel.ch www.stravel.ch
044 419 91 00
079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# பெரியாரை மதியாத சமுகத்தில் பெரியார்கள் உருவாகமாட்டார்கள்! தடங்களின் நினைவுகள் நூல்வெளியீட்டு விழாவில் நூலாசிரியர்

(வி.ரி.சகாதேவராஜா)

‘பெரியாரை மதியாத சமுகத்தில் பெரியார்கள் உருவாகமாட்டார்கள்’ என்பது அறிஞர் சித்திலெவ்வையின் கருத்தாகும். உண்மையில் சமுகத்தில் சேவைசெய்தவர்களை அச்சமுகம் மதிக்கத்தவறுமானால் அச்சமுகத்தில் சேவையாளர்கள் உருவாகமாட்டார்கள். அதன் பிரதிபலிப்பே இந்த சுயசரிதை நூல் எழுதுவதற்குக் காரணமாகும்.

இவ்வாறு சாய்ந்தமருது சிரேஸ்ட பிரஜைகள் சபையின் தலைவரும் பிரபல சமுகசேவையாளருமான டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் ‘தடங்களின் நினைவுகள்’ நூல்வெளியீட்டு விழாவில் ஏற்புரையாற்றியபோது தெரிவித்தார்.

சர்வதேச முதியோர் தினத்தன்று சாய்ந்தமருதைச்சேர்ந்த பிரபல சமுகசேவையாளர் டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் எழுதிய ‘தடங்களின் நினைவுகள்’ நூல்வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் சாய்ந்தமருதிலுள்ள அவரது இல்லத்தில் சுகாதாரமுறைப்படி சொற்ப பங்குபற்றுனர்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனத்தின் தலைவரும் சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைச் சபையின் அம்பாறைமாவட்டத்தலைவருமான டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் தனது 77 வருடகால வாழ்க்கையை சுயசரிதையாக எழுதி ‘தடங்களின் நினடிவுகள்’ என்ற மகுடத்தின்கீழ் 170பக்கங்களில் வெளியிட்டுள்ளார். இதனை சாய்ந்தமருது சிரேஸ்ட பிரஜைகள் சபை வெளியிட்டுவைத்தது.







சாய்ந்தமருது சிரேஸ்ட பிரஜைகள் சபையின் செயலாளர் அல்ஹாஜ் எம்.ஐ.அப்துல் ஜப்பார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நூல் அறிமுகவுரையை முன்னாள் கல்முனை சாஹிறாக்கல்லூரி அதிபரும் மூத்தஎழுத்தாளருமான கலாபூசணம் எ.பீர்முகமட்டும் நூல் விமர்சனஉரையை மூத்த எழுத்தாளரும் உதவிக்கல்விப்பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜாவும் நிகழ்த்தினர்.

வர்த்தகப் பிரமுகர் முஹம்மட் நஸீர் ஹாஜியார், நூலின் முதற் பிரதியை பெற்றுக் கொண்டார்.

இதன்போது சாய்ந்தமருது வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஏ.ஆர்.எம்.மௌலானா, நூலாசிரியர் டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீலின் வைத்திய மற்றும் கல்வி, கலாசார, சமூக சேவைகளையும் சமாதான, இன ஐக்கிய, சிவில் செயற்பாடுகளையும் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அங்கு டாக்டர் ஜமீல் மேலும் ஏற்புரையாற்றுகையில்:சமுகத்தில் நற்பணியாற்றி நல்லபண்புகளுடன் வாழ்ந்த பெரியோர்களையும் சாதடின படைத்தவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் பழக்கம் குறைவடைந்துவருகிறது. உண்மையில் அப்படிப்பட்ட பெரியவர்களை அச்சமுகம் பாராட்டத்தவறுகின்ற பட்சத்தில் அவர்களாகவே அவர்களது சேவையை வெளிக்கொணரவேண்டிய தேவை அவசியம் எழுகின்றது. அதன் வெளிப்பாடே இந்த சுயசரிதை.

நான் உண்மையில் பாராட்டையோ கௌரவிப்பையோ எதிர்பார்க்கவில்லை. எனினும் நான்சார்ந்த துறைகளில் நிறுவனங்களில் ஆற்றிய சேவைகளை அவர்கள் வெளிக்கொணர்ந்திருந்தால் அது ஏனைய வருங்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாகஇருந்திருக்கும். ஆனால் அது நடைபெறவில்லை. ஆதலால் நானாகவே எனது சுயசரிதையை எழுத உந்தப்பட்டேன். அதன் வெளிப்பாடுதான் இந்த நூல். இங்கு ஓய்வுபெற்ற பிரபல பாளிகா அதிபர் பஷீர் இருக்கிறார்;. அவர் முன்மாதிரியாக இருந்திருக்கிறார். அவர் அவரது காலத்தில் அங்கு நடைபெற்ற அனைத்து விழாக்களிலும் முன்னாள் ஸ்தாபக அதிபரான ஹமீட் அவர்களை அழைக்கின்ற பண்பைப் பார்த்திருக்கிறேன். அத்தனை விழாக்களிலும் அவரைக்கணாலாம். அதிபர் பஷீரின் மூத்தோரை மதிக்கும் பண்பு உயர்ந்தது. அதனால் அவர் உயர்ந்து நிற்கிறார். இனிமேல் உள்ளவர்கள் பஷீரை அழைப்பார்களா? என்பது சந்தேகம்.

மூத்தோர் எனும்போது வயதுகூடியவர்கள் மட்டுமல்ல சமுகத்தில் சேவையில் மூத்தவர்களை பண்பில் மதிப்பதில் நல்லவர்களைக்கூறலாம்.

நான் கொழும்பு சாஹிறாக்கல்லூரியில் பயின்ற போது அங்குள்ள அதிபர் எ.எம்.எ.அசீஸ் இராஜினாமாச்செய்த காரணத்தினால் எழுந்த குழப்பத்தில் எமது உயர்தரப்படிப்பு சீர்குலைந்தது. அதனால் நான் நேராக மருத்துவத்துறைபட்டப்படிப்பிற்குச்செல்லமுடியாமல் போனது. எனினும் அப்போதிக்கரி பயின்று சமுகத்தில் வேறுபல திருப்தியான சேவைகளைச் செய்யமுடிந்தது. இறைவன் நாடினால் நாம் சாதனை படைக்கலாம்.அது முடியும்.

வாழ்க்கையில் 58வருடங்கள் எனது சேவையில் மிகவும் திருப்தியடைந்தேன். எனக்கு பூரண ஒத்துழைப்பை நல்கிய அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றிகூற ஆசைப்படுகின்றேன். என்றார்.

அதிபர் ஏ.ஜீ.ஏ.றிசாட் நன்றியுரையாற்றினார். பிரதிகள் சமகமளித்த பிரமுகர்களுக்கு வழங்கிவைக்கப் பட்டது.

## டோக்டர் ஜெமீல் எழுதிய ‘தடங்களின் நினைவுகள்’ நூல் வெளியீடு





(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் முன்னாள் தலைவரும் சாய்ந்தமருது வைத்தியசாலையின் முன்னாள் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் எழுதிய ‘தடங்களின் நினைவுகள்’ சுயசரிதை நூலின் முதலாம் கட்ட வெளியீடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் சபையின் ஏற்பாட்டில் அதன் செயலாளரும் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளருமான எம்.ஐ.அப்துல் ஜப்பார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.பீர்முஹம்மட், நூல் அறிமுகவுரையையும் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, நூல் விமர்சன உரையையும் நிகழ்த்தினர். வர்த்தகப் பிரமுகர் முஹம்மட் நஸீர் ஹாஜியார், நூலின் முதற் பிரதியை பெற்றுக் கொண்டார்.

இதன்போது சாய்ந்தமருது வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஏ.ஆர்.எம்.மௌலானா, நூலாசிரியர் டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீலின் வைத்திய மற்றும் கல்வி, கலாசார, சமூக சேவைகளையும் சமாதான, இன ஐக்கிய, சிவில் செயற்பாடுகளையும் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

அத்துடன் நூலாசிரியர் டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் ஏற்புரையையும் இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜீ.எம்.ரிஷாத் நன்றியுரையையும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கல்வியியலாளர்கள், உலமாக்கள் மற்றும் பிரமுகர்கள் பலர் கொண்டு சிறப்புப் பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

## வாய்க்காலில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

( ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவகிரி நகர் 38 ஆம் கிராமத்தின் வயற் பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் சனிக்கிழமை(03) இரவு மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அக்கிராமத்தைச் சேர்ந்த 55 வயதுடைய 7 பிள்ளைகளின் தந்தையான அமரசிங்கம் சந்தரலிங்கம் என அடையாளம் காணப் பட்டுள்ளார்.



இவ்விடையம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

வெள்ளிக்கிழமை(01) வயலுக்குச் செல்வதாக தெரிவித்து விட்டு சென்ற குறித் நபர் சனிக்கிழமை வரை வீடு திரும்பாதவிடத்து உவினர்கள் தேடியுள்ளனர். இனந்நிலையில் சனிக்கிழமை மாலை அப்பகுதியில் கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் வயற் பகுதியில் அமைந்துள்ள வாய்க்காலில் ஒரு உடல் கிடப்பதாக தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வெல்லாவெளி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்ததோடு, உறவினர்கள் உடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர். இந்நிலையில் களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கமை வெல்லாவெளி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தி, பிரேத பரிசோதனைக் குட்படுத்தும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார். சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## என்ன வளம் இல்லை இந்த விபுலமண்ணில்...?

### பிரதேசசெயலாளர் ஜெகராஜன்

(வி.ரி.சகாதேவராஜா)

‘‘என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் ..’’ என்று பாடினான் ஒரு கவிஞன். அதேபோல் எமது விபுலமண்ணில் என்ன வளம் இல்லை? அனைத்துமுள்ளது. எனவே சகல விடயங்களிலும் நாம் தன்னிறைவு காணவேண்டும். அதற்கான ஒரு படியை எடுத்திருக்கின்ற 196%அணியை பாராட்டுகிறேன்.

இவ்வாறு காரைதீவில் இடம்பெற்ற காரைஅரிசி உற்பத்தி அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டுரையாற்றிய காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தெரிவித்தார்.




சிறிய அரிசி உற்பத்தியாளர்களை ஊக்குவித்து நாட்டரிசியினை மக்களுக்கு தாராளமாக கிடைக்கச்செய்யும்வகையில் அனுசரணை செய்யும் 196% நண்பர்கள் குழாத்தினர் முதற்கட்டமாக காரைதீவு 8 இல் உள்ள சி.சிவானந்தம் என்ற அரிசி உற்பத்தியாளரை ஊக்குவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

காரைதீவு 1967 நண்பர்கள் குழாத்தின் தலைவர் செ.மணிச்சந்திரன் தலைமையில் நிருவாக பீடஉறுப்பினர் ச.நந்தேஸ்வரனின் நெறிப்படுதலில் இவ் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

அங்கு பிரதேசெயலாளர் ஜெகராஜன் கூறுகையில்:

முதலில் அகலக்கால் வைக்காமல் சிறிய முதலீட்டாளர்களை ஊக்குவித்து இந்த மண்ணில் அரிசிஉற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும் என்ற அடிப்படையில் ஊரில் 196% இல் பிறந்தவர்கள் ஒன்றுசேர்ந்து மண்பற்றுகாரணமாக இந்த சேவையை செய்யமுன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது. இவ்வுற்பத்திக்கு ‘காரைஅரிசி’ எனப் பெயரிட்டுள்ளமையை பெரிதும் வரவேற்கிறேன்.

1967 நண்பர்கள் குழாத்தைச்சேர்ந்த உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 54பேர் உள்ளோர் நிதியுதவி செய்து இந்த மண்ணில் பல சேவைகளை செய்துவருகின்றமையை அறிவேன். பிறந்தமண் பற்றுகாரணமாக நிறைய நெல் வளமுள்ள இந்தவூரில் அரிசிக்காக பிறரிடம் செல்லவேண்டிய துர்ப்பாக்கியநிலையை தவிர்க்குமுகமாக இப்புது முயற்சியை ஆரம்பித்துள்ளமை வரவேற்புக்குரியது.பாராட்டுக்குரியது. என்றார்.

நிகழ்வில் ஒன்றிய பொருளாளர் எஸ்.நந்தகுமார் சமுகசேவையாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்டோர் உரையாற்றினர். செயலாளர் எம்.ஜீவராஜ் நன்றியுரையாற்றினார்.

## மடத்தடிமீனாட்சி அம்மனாலய மகா கும்பாபிசேக முன்னோடி கலந்துரையாடல்



(வி.ரி.சகாதேவராஜா)

நிந்தவூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுக்கான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத்தில் நடைபெற்றது.

ஆலயத்தலைவர் கோ.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் முக்கிய பிரதானியாக கலந்துகொண்டார்.



மாவட்ட இந்துசமய கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறில் ஆலயபோசகர் வி.ரி.சகாதேவராஜா ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடல் நிகழ்வில் ஆலய எதிர்கால செயற்பாடுகள் மற்றும் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு நடத்துவதற்கான ஆரம்ப முன்னெடுப்புகள் தொடர்பாக கலந்துரையாடல் சுகாதார நடைமுறைகளுடன் இடம்பெற்றது.

சகல ஊர்களையும் இணைத்து முக்கியமான கும்பாபிசேகத்திற்கான ஒரு பொதுக்கூட்டமொன்றினை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30மணிக்கு நடாத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## 5 முறை தேசிய சாஹித்ய மண்டல விருது பெற்ற எழுத்தாளர் ஜுனைதா சேரீர் காலமானார்

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

காத்தான்குடியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சிரேஷ்ட நிருவாக அதிகாரியும் பிரபல எழுத்தாளருமான அல்ஹாஜ் ஜுனைதா ஷெரீப்(கே.எம்.ஊம்.ஷரீப்) அவர்கள் நேற்று அதிகாலை காலமானார்.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளராகவும் கிழக்கு மாகாண பிரதி தபால் மா அதிபராகவும் பல்வேறு அமைச்சுக்களில் செயலாளராகவும் நிர்வாகத் துறையில் பணியாற்றிய ஜுனைதா செரீப் அவர்கள் மரணமாகும்போது 80 வயது என்பது குறிப்பிடத்தக்கது.



சாணைக்கூறை உன்ற இவரது சமுக நாவல் சர்வதே ரீதியில் புகழ் பெற்றதாகும்.10க்கும் மேற்பட்ட நாவல்களையும் 100க்கும மேற்பட்ட சிறுகதைகளையும் 200க்கும் அதிகமான வானொலி நாடகங்களையும் எழுதிய இவர் இலங்கையில் அதிக தடவைகள் தேசிய சாகித்ய மண்டல வருதுபெற்ற முஸ்லிம் இலக்கிய வாதியாவார்.

இவரது கெரும் எண்ணிக்கையிலான நாடகங்கள் வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாவல் இலக்கியத்துறைக்கு வழங்கப்படும் உலக விருதான கரிகாலன் விருதையும் இந்தியாவில் வைத்து பெற்றவர்.

## முதியோர்களை வீடு தேடிச் சென்று கௌரவிக்கும் நிகழ்வு

(பைஷல் இஸ்மாயில்)

சர்வதேசமுதியோர்தினத்தினையொட்டி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் 100வயதினைக்கடந்த சிரேஷ்ட பிரஜைகள் பலர் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் ஷாபிரின் ஆலோசனைக்கமைவாக பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.கைஸினால் ஏற்பாட்டு செய்யப்பட்ட இந்த கௌரவிப்பு நேற்று இடம்பெற்றது.

இதன் போது அட்டாளைச்சேனை 08 ஆம் பிரிவில் வசிக்கும் யூசுப் லெப்பை உதுமாலெப்பை (100வயது), அட்டாளைச்சேனை 01 ஆம் பிரிவில் வசிக்கும் ஏ.எல்.சுலைமாலெப்பை (104வயது), பாலமுனை 01 ஆம் பிரிவில் வசிக்கும் அவ்வா உம்மா (104வயது) உள்ளிட்ட பலரை அவர்களுடைய வீட்டிற்குச் சென்று பொன்னாடை போர்த்தி பரிசுப் பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் ஷாபிர், உதவிப் பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முதியோர் தினத்தில் முதியோர்களை வீடு தேடிச் சென்று கௌரவிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக வரலாற்றில் இடம்பெற்றது இதுவே முதற்தடவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நீத்தார் பெருமை மர்ஹூம் அல்ஹாஜ் முத்தலிபு முகம்மது யூசுப் மௌலவி அவர்களின் வாழ்வும் பணிகளும் ஹஸன்ஜி ஐதுரூஸ்



உலகம் மனிதன் செயற்படுவதற்காக வழங்கப்பட்ட களம். அவன் உலக செயற்களத்தில் செய்யப்படும் முயற்சிக்கும் இயல்போடு படைக்கப்பட்டிருக்கின்றான். அவன் இயல்பாக இயங்கிக் கொண்டே இருக்கின்றான். மனிதன் தன் பிறப்பின் தொடக்கத்திலிருந்தே முயற்சிக்கவும், செயற்படவும் தொடங்குகிறான். தவழுதல், நடைபயிழுதல், உணவு உடை, உறைவிடமென உழைக்கின்றான். இவ்வாறு பல தேவைகளை நிறைவு செய்ய செயற்பாட்டை அதிகரிக்கின்றான். இவ்வாறான முயற்சிகள் உலகின் ஆக்கத்திற்கும் அல்லது அழிவுக்கும் காரணமாக அமைகின்றன.

'நிச்சயமாக உங்கள் முயற்சிகள் பல்வகையாக அமைந்திருக்கின்றன' (அல்லைல் 04) என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

இங்கு 'ஸஃயு' என்ற சொற்பிரயோகம் மனிதனது ஆக்கபூர்வமான முயற்சிகளையும் அழிவு வேலைக்கான அவன் எடுக்கும் அனைத்து வகையான முயற்சிகளையும் சுட்டிக்காட்டுகின்றது. மிகச் சிறந்த செயற்பாட்டாளனாக மனிதன் இருக்க வேண்டும் என்பது தான் அல்லாஹ்வின் எதிர்பார்ப்பு. அவன் ஈமானைக் கொண்டு மிகச் சிறந்த நற்பண்புகளை ஆற்ற வேண்டும். விளைவாக அமைதியும் செழிப்புமிக்கதாக மாற வேண்டும் என்பதே இஸ்லாத்தின் தெளிவான செய்தியாகும்.

அவன் வாழ்வையும் மரணத்தையும் ஏற்பாடு செய்தான். நோக்கம் உங்களில் யார் மிகச் சிறந்த கருமமாற்றுபவர் என்பதை சோதிப்பதற்கே (சூரத்துல் முல்க் 02) நற்பணி, முதன்மைப்பணி, காலம் வேண்டி நிற்கும் பணி என்பதை உணர்ந்து பொருத்தமான பணி என்பவற்றில் ஒரு முஸ்லிம் தனித்துவமாக கவனம் எடுக்க வேண்டும்.

ஏனென்றால் அவனது செயற்பாட்டை அல்லாஹ்வும், றஸூலும், முஃமீன்களும் பார்த்திருக்கிறார்கள். அது பற்றி அறிவித்து தீர்ப்பு வழங்க காத்திருக்கிறான். இவ்வாறான இறைமறை குர்ஆனின் கூற்றுகளிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்று தெளிவாக புரிகிறதல்லவா, உலகில் யார் யாரெல்லாம் காலமறிந்து தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார்களோ கருமமாற்றுகின்றார்களோ, மனித வாழ்வை இலகுபடுத்துகின்றார்களோ மனித வாழ்வை வேண்டி நிற்பவற்றை நாம் உச்ச முயற்சியினால் யார் உலகுக்கு வழங்க இருக்கின்றார்களோ அவர்களது கரங்களில்தான் உலகம் உருளும் என்ற இறை நியதியை முஸ்லிம் மறந்து விட்டான். மறந்து விடுகின்ற இக்கால கட்டத்திலும் மற்றும் அல்ஹாஜ் முத்தலிபு முகம்மது யூசுப் மௌலவி அவர்களின் வாழ்வும் பணிகளும் மேற்கூறிய கருத்துக்களையும் சார்ந்ததாகவும் வாழ்வு நிறைவு பெற்றிருப்பது மாஷாஅல்லாஹ்! அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக ஆமீன்.

அவர்களது வாழ்வியலை பின்நோக்கி பார்ப்போமேயானால் அல்ஹம்துலில்லாஹ். அன்னாரது செயற்பாடுகள் பற்றி ஓராண்டு பூர்த்தியாகும் இன்றைய தினத்தில் நினைவு மலராக வெளிவந்திருக்கும் சிறு தொகுப்பு நூலாக்கம் அவரது வாழ்நாளில் வெற்றி கொண்டு பணியாற்றிய செயற்பாடுகள், அன்னாரது பண்பாடு, பழக்கவழக்கம், ஆளுமைகள், கல்வி நிலைக் கருத்துகள், பதவிகள், தொண்டுள்ளம் பற்றியெல்லாம் சமகாலத்தில் அவர்களோடு தோழோடு தோள்கொடுத்து தொண்டாற்றிய கல்விமாண்கள் இத்தொகுப்பிலே பல்வேறு தலைப்புக்களில் விவரண விரிவாக்கம் தந்திருப்பதும், அவைகளை தொகுப்புக்குள்ளாக்கி தொகுத்து நூலாக்கம் தந்திருப்பதுமான மருமகனாகிய கவிஞர் ஏ.எம். கஸ்புள்ளா அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

மற்றும் இந்நூல் தொகுப்பில் யூசும் மௌலவி அவர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ள தலைப்புக்கள் பொருத்தமான தலைப்புக்களாக அமைந்துள்ளன. அவர்களது ஆரம்பக் கல்வி முதல் பதவி, பணிகள் பற்றி சுருக்கமாக சிலவற்றைக் குறிப்பிடுவது காலப் பொருத்தமாகும் என நினைக்கின்றேன்.

இவர்கள் 1948.01.16 ஈச்சந்தீவில் பிறந்த றகுமானிய்யா அரபுக் கல்லூரியிலும், ஸஹதிய்யா அரபுக் கல்லூரியிலும் மார்க்கக் கல்வியைக் கற்று மௌலவியாகி 1973.6.13 இல் மௌலவி ஆசிரிய நியமனம் கிடைத்தது. இவர்கள் கிண்ணியாப் பிரதேசத்தில் பல்வேறு பாடசாலைகளில் பணிகளை ஆற்றியுள்ளார்கள்.

மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள் கிண்ணியாவில் இரண்டு பெரும் சொத்துக்கள் உருவாக காரணகர்த்தாவாக இருந்துள்ளார்கள். அவை

**1. கிண்ணியா அல்அக்தாப் வித்தியாலயம்**
**2. கிண்ணியா சுமையா பெண்கள் அரபுக் கல்லூரி**

போன்றவையாகும்.

பிரதேசத்தில் கல்விச் சூழலற்ற பகுதியாகக் காணப்பட்ட றகுமானிய்யா நகரில் ஒரு பாடசாலையை அமைக்க வேண்டும் என்ற அவரது எண்ணக்கரு நிறைவேறியது. அதாவது றகுமானிய்யா நகரில் கடற்பரப்பில் அருகாமையில் அமர்ந்து காட்சியளிக்கும் அல்அக்தாப் வித்தியாலயம் அப்பிரதேசவாதியான அக்தாப் என்பவர் தனது காணியை நன்கொடையாக வழங்கியதால் அவரது பெயரிலேயே அல்அக்தாப் வித்தியாலயம் மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்களின் தனி முயற்சியின் காரணமாக கட்டடம் அமையப் பெற்றது.

2004 இல் சுனாமி காலத்தில் பாடசாலை நடைபெறாது இருந்தபோது மாணவரின் கல்விநிலை பாதிக்கும் என்ற எண்ணத்தில் தனது சொந்த வீட்டை பாடசாலையாக மாற்றி மாணவர்களுக்கு கல்வியைக் கொடுத்து பெருமையைப் பெற்றவர்.

கல்வி அமைச்சின் பல்வேறு பயிற்சி வகுப்புகள் என்பவற்றில் கலந்து கொண்டு தனது சேவையை மேம்படுத்திக் கொண்டவர். பாடசாலை முகாமைத்துவம், திட்டமிடல், வதிவிட செயலமர்வு, கல்வி உயர்கல்வி அமைச்சு மற்றும் வடகிழக்கு மாகாணம் போன்ற திணைக்களங்கள் ஏற்பாடு செய்த பயிற்சிகளை திறன்பட பூர்த்தி செய்தவர்.

இதன் பேராக ஆசிரியராகவும் அதிபராகவும் 36 வருடங்கள் கடமைபுரிந்துள்ளார்.

மேலும் சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியில் ஆரம்ப காலம் தொட்டு மர்ஹூம்களான எஸ்.ஏ.இஸ்மாயில் மௌலானா, ரீ.ஏ.எம். இஷ்ஹாக் (வட்டாரக் கல்வி அதிகாரி), ஏ.சீ.எம். இஷ்ஹாக் மௌலவி அவர்களுடன் இணைந்து யூசுப் மௌலவி அவர்களும் பல்வேறு வழிகளில் சுமையா அரபுக் கல்லூரி உருவாக்கத்திற்கு துணை நின்றார்கள்.

அதாவது,

- ★ காணியைப் பெற்றுக் கொள்வதில்
- ★ நிதியைப் பெற்றுக் கொள்வதில்
- ★ கட்டடம் கட்டப்படுவதில்
- ★ மாணவர்களின் வளத்தை உருவாக்குவதில்
- ★ அவர்களுக்கு சிறந்த ஆசான்களை தேர்வு செய்வதில்
- ★ நிருவாக செயற்பாட்டில்

என இவரது பங்களிப்புகள் விரிவாக அமைந்தன. பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து மர்ஹூம் இஷ்ஹாக் சேர் அவர்களுடன் இரவு பகலாக சுமையா பெண்கள் அரபுக் கல்லூரிக்கு கால நேரத்தை அர்ப்பணம் செய்வதில் யூசுப் மௌலவி அவர்களின் பங்கு பெரிதானதே. 40 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைகளை இக்கல்லூரிக்குச் செய்துள்ளார். சமூகத்தை நேசித்ததன் காரணமாக ஜம்இய்யத்துல் உலமா சபை செயலாளராக, பொருளாளராக, மத்திய சபை உறுப்பினராக இதற்கான சமாதான நீதவானாகவும், பள்ளிவாசல் சமாஜங்களின் உறுப்பினராகவும், காழி நீதிமன்றத்தின் யூரியாகவும், பள்ளிவாசல் தலைவராகவும் என பல்வேறு அமைப்புக்களில் சேவைகளிலும் இருந்தபோதும் அவர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. மென்மையான உள்ளம் கொண்டவராக இருந்தார்.

இவ்வாறான ஒரு மனிதருக்கு பொருத்தமான உயர் விழுமியங்கள் காணப்படுவதால் அவர் என்றும் பேசப்படுவார் என தமது கட்டுரையில் மனித நேயமிக்க மாமனிதர் மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள் என்று சுமையா அரபுக் கல்லூரியின் தலைவர் எஸ்.எம். ஷரீப் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அனைத்து உள்ளங்களாலும் நேசிக்கப்பட்ட நிலையில் சிறிது நோய்வாய்ப்பட்டிருந்த அவர் கடந்த 2020.10.04 ஆம் திகதி அன்னார் இவ்வுலகை விட்டு பிரிந்தார். அவரது நற்பணியும் சமூக நலத்திட்டங்களையும், வழிகாட்டல்களையும், முன்மாதிரிகளையும் இறைவன் ஏற்று அவருக்குரிய கூலியை மறுமையில் வழங்குவானாக ஆமீன்.

தகவல் : இஃஜாஸ் ஏ பரீட்



முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

Child Friendly Cities Initiative

# Batticaloa Kids Got Talent

# CONTEST

## For Children's Day 2021

வயதெல்லை: 5-15

உங்கள் ஆக்கங்களை எங்களுடன் புகைப்படமாகவோ அல்லது வீடியோ பதிவாகவோ பகிர்ந்து கொள்ளுங்கள்:

- வரைதல் (புகைப்படத்தை அனுப்பவும்)
- நடன வீடியோ
- பேச்சு வீடியோ
- வீட்டுத் தோட்ட வீடியோ சுற்றுப்பயணம்
- கைவேலைப்பொருட்கள் -உங்கள் சொந்த படைப்புகள் வீடியோவாக
- கதை சொல்லும் வீடியோ
- பாடல் பாடிய வீடியோ

கீழே உள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை உங்கள் ஆக்கங்களுக்காக தெரிவு செய்யவும்.

1.கோவிட் 19 தொற்றுநோய் உங்கள் வாழ்க்கை, கல்வி மற்றும் கனவுகளை எவ்வாறு பாதித்தது?

2. உங்கள் நகரை சிறுவர் சிநேகமாக எவ்வாறு பார்க்க விரும்புகிறீர்கள்?

உங்கள் படைப்புகளை பின்வரும் வாட்ஸ்அப் அல்லது மின்னஞ்சலில் 15.10.2021 க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

+94768183878

Tharniya.Thavendraan@CERIkids.org

ceri SRI LANKA

unicef for every child ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்